# அலையாத்திக் காடுகளின் வளர்ச்சி இரண்டு மடங்காக அதிகரிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... முதல் பக்கத் தொடர்ச்சி

வகுப்பறைகளில், கூல் ரூஃபிங் எனப்படும் அதிக வெப்ப பிரதிபலிப்புமிக்க வெள்ளைப் பூச்சுகள் பூசப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக வகுப்பறைகளில் வெப்ப அளவினை கணக்கிடக் கூடிய சென்சார்கள் வைத்து கண்காணித்ததில், அறை வெப்ப நிலை 1.5 டிகிரி முதல் 3 டிகிரி வரை குறைந்திருக்கிறது. இது குறித்த அறிக்கையின் அடிப்படையில், இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டில் இருக்கும் 297 பசுமைப் பள்ளிகளிலும் செயல்படுத்த இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், மேற்சொன்ன இயக்கங்கள் மூலமாக, கார்பன் சமநிலை மையங்கள், காலநிலை மீள்திறன்மிகு கிராமங்கள், கடலோரப் பகுதிகளில், உயிர்க் கேடயங்கள் அமைத்தல் போன்ற, முக்கியமான காலநிலை மாற்றத் தடுப்பு மற்றும் தகவமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கடந்த அக்டோபர் மாதம் நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான, கரிம நீக்க வழித்தடங்கள் குறித்த செயல்திட்டமும், தமிழ்நாட்டிற்கான காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு வலைதளமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

**அலையாத்திக் காடுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!**

கடலூர் மாவட்டம், பிச்சாவரம் அருகே கிள்ளையில் காலநிலை மீள்திறன்மிகு கிராம திட்டத்திற்காக பிரத்யேகமான, திட்ட மேலாண்மை அலகுடன் கூடிய அலுவலகத்தையும் தொடங்கி வைத்திருக்கிறோம். மேலும், அங்கு இருக்கும் அரசு அலுவலகங்களில், சூரிய ஒளி மின்னாற்றல் உற்பத்தி, மக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டிற்கான பயிற்சிகள், வெள்ள அபாயங்கள் ஏற்படாமலிருக்க பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரப்பட்டு சீரமைத்தல், பிச்சாவரம் படகு குழாமிற்கு மின்னாற்றலில் இயங்கக்கூடிய படகு வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தக் கிராமம் காலநிலை மீள்திறன்மிகு கிராமமாக மாற்றுவதற்கான முதல் படி எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

கடலோர வாழ்விடங்களை, இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மறுசீரமைக்கும் திட்டத்தின்கீழ், தொடர்ச்சியாக அலையாத்தி மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இதன் ரிசல்ட் என்ன தெரியுமா? தமிழ்நாட்டில் 4500 ஹெக்டேர் பரப்பளவுக்கு இருந்த அலையாத்திக் காடுகள், 9000 ஹெக்டேராக, அதாவது, இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது. இந்தச் சாதனையில் பங்கு வகித்த எல்லோருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர் நிலைகளைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் தனி நபர்களையும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் Encourage செய்கிறோம். மாவட்டத்திற்கு ஒருவர் என்று 38 பேருக்கு கடந்த ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் நாளில், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் கூடிய, முதலமைச்சரின் நீர் நிலைப் பாதுகாவலர் விருது வழங்கியிருக்கிறோம்.

**பாலின சமத்துவத்தை உறுதி செய்யப்பட வேண்டும்!**

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் மூலம், நிலைத்தகு நடைமுறைகளைப் பின்பற்றும் தொழிற்சாலைகளுக்கு, தன்னார்வ பசுமைத் தரச்சான்றிதழ் வழங்கும் திட்டமானது, தொழிற்சாலைகளால் ஏற்படும் உமிழ்வுகளைக் கட்டுப்படுத்த உதவும் என்று நம்புகிறோம். உலகெங்கும் ஏற்படும் இயற்கைப் பேரிடர்களில், அதிகம் பாதிக்கப்படுபவர்களாக பெண்களும், பெண் குழந்தைகளும் இருக்கிறார்கள் என்று ஆய்வுகளில் உறுதியாகி இருக்கிறது.

அதனால், பாலின சமத்துவத்தை உறுதி செய்கின்ற விதத்தில் அரசின் திட்டங்களும், காலநிலை தடுப்பு மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் உங்களிடம் நான் கோரிக்கை வைக்கிறேன். ஏனென்றால், நம்முடைய திராவிட மாடல் அரசு பெண்களுக்கான அரசாக அனைத்துத் துறைகளிலும் பெயர் பெற்றிருக்கிறது. அது இங்கும் தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் பெண்களின் பங்குதான் அளப்பரியது. அதனால்தான், ‘க்ளைமேட் வாரியர்ஸ்’ என்கிற திட்டத்தின்கீழ் 100 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு, காலநிலை மாற்றம் மற்றும் நெகிழி ஒழிப்புப் பரப்புரையையும் மேற்கொள்ள, 100 இஆட்டோக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் பெண்களின் பங்கு அளப்பரியது!

தமிழ்நாட்டின் மொத்த Greenhouse Gas Emissions போக்குவரத்துத் துறையின் பங்கு 12 விழுக்காட்டிலிருந்து 19 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது என்று ஆய்வறிக்கைகளில் தெரிய வந்திருக்கிறது. அதுவும், கடந்த 2005 முதல் 2019க்கு இடைப்பட்ட காலத்தில், இது 3 மடங்கு அதிகரித்திருக்கிறது.

**போக்குவரத்து நெரிசலை குறைக்க நடவடிக்கை!**

சென்னை போன்ற மெட்ரோ சிட்டியில் போக்குவரத்து நெரிசலும் அதிகரித்து வருகிறது. மக்கள் அதிகமாக பொது போக்குவரத்தை பயன்படுத்துவதுதான் இதைக் குறைக்க சிறந்த வழி! அதை ஊக்குவிப்பதற்காகதான், MTC மூலமாக, முதற்கட்டமாக 120 மின்சாரப் பேருந்துகளை பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறோம். மக்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. அதனால், மேலும் 600 மின்சாரப் பேருந்துகளை விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்போகிறோம். இதனால், Trafficம் குறையும், Pollutionம் குறையும், எல்லோருடைய நேரமும் மிச்சமாகும்.

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இவ்வளவும் செய்திருப்பதால்தான், ஒன்றிய அரசே நமக்கு Certificate வழங்கியிருக்கிறார்கள். நிதி ஆயோக் வெளியிட்டிருக்கும் HTG Rankஇல் “Climate Action” மற்றும் “Clean Energy” ஆகிய இலக்குகளில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது.

**‘திராவிட மாடல்’ வளர்ச்சிக்கு ‘தி எகனாமிஸ்ட்’ பாராட்டு!**

உலகப் புகழ்பெற்ற ‘தி எகனாமிஸ்ட்(The Economist)’ போன்ற இதழ்களும் நம்முடைய திராவிட மாடல் வளர்ச்சியைப் பாராட்டுகிறார்கள். நான் எப்போதும் சொல்வதுதான்: “நம்முடைய அரசுக்கு வளர்ச்சி ஒரு கண் என்றால், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது மற்றொரு கண்” இயற்கை வளப் பாதுகாப்புடன் இணைந்த வளர்ச்சிதான், எதிர்கால சந்ததிகளுக்கான உண்மையான வளர்ச்சியாக இருக்க முடியும்.

அண்மையில், பிரேசிலில் நடைபெற்ற “UN Climate Change Conference (COP 30)” மாநாட்டில், Global Climate Council உருவாக்க வேண்டும் என்று பிரேசில் முன்மொழிந்திருக்கிறார்கள். ஆனால், 3 ஆண்டுகளுக்கு முன்பே, காலநிலை ஆட்சி மன்றக் குழுவை உருவாக்கி, உங்களின் Advice எல்லாவற்றையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அதன் Result தான் நமக்கு கிடைக்கும் பாராட்டுகளும், உலக அங்கீகாரங்களும்!

இப்போது கூட, நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு அவர்களுக்கு, ஐ.நா.வின் உயரிய விருது கிடைத்திருக்கிறது. நம்முடைய அரசுக்கு கிடைக்கும் நல்ல பெயருக்கு உங்களின் ஆலோசனைகள்தான் முக்கியக் காரணம். அதற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புவி வெப்பமயமாதலைப் பொறுத்தவரை, தமிழ்நாடு 2070ஆம் ஆண்டிற்கு முன்பே, ‘நெட் ஜீரோ’ இலக்கை அடைய வேண்டும்!

**தமிழ்நாட்டிற்கு பேரிடர் நிதி வெறும் 17 சதவிகிதம்தான் வந்தது!**

கடந்த 4 ஆண்டுகளாக, Policy, Action இரண்டிலும் விரிவாக பணியாற்றி இருக்கிறோம். நம்முடைய அரசு வருவதற்கு முன்பு, இதற்கான நிதிஒதுக்கீடும்மிகவும்குறைவாகதான் இருந்தது. ஆனால், திராவிட மாடல் அரசில் 500 கோடி ரூபாய் வரை இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். மாநில அரசின் நிதியிலிருந்தே நம்முடைய முன்னெடுப்புகளை எல்லாம் மேற்கொண்டு இருக்கிறோம் என்பதுதான் மிக முக்கியமானது.

நமது மாநிலத்தை பாதித்த பேரிடர்களுக்கான நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு கேட்டதில் வெறும் 17 விழுக்காடுதான் ஒன்றிய அரசு விடுவித்திருக்கிறது. நாம் கேட்டது 24 ஆயிரத்து 679 கோடி ரூபாய். அவர்கள் வழங்கியது வெறும் 4 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மட்டும்தான்!

எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு தமிழ்நாடு போராடியிருக்கிறது! வென்றிருக்கிறது! நாட்டிற்கே வழிகாட்டி இருக்கிறது! அதுபோல், இந்த காலநிலை மாற்றச் சவால்களையும் எதிர்த்து, தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

## சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பொதுநலச் சங்கங்கள் - வணிக அமைப்புகள் - இளைஞர்கள் - விவசாய அமைப்புகள் - தொழிலாளர் அமைப்புகள் - தோழமை இயக்கத்தினர் மற்றும் பொதுமக்களின் நலன் விழையும் அமைப்புகளுடன் கலந்தாலோசித்திட தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்ட குழுவினர் விவரம் :

தலைமை : **கனிமொழி கருணாநிதி,**
(துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. டி.கே.எஸ். இளங்கோவன்**
(செய்தித் தொடர்பு தலைவர்)

**முனைவர் கோவி.செழியன்**
(வர்த்தகர் அணி துணைத் தலைவர்)

**முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**
(சொத்து பாதுகாப்புக்குழுச் செயலாளர்)

**முனைவர் டி.ஆர்.பி. ராஜா,**
(தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்)

**திரு. எம்.எம். அப்துல்லா,**
(அயலக அணிச் செயலாளர்)

**பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
(செய்தித் தொடர்பு செயலாளர்)

**மருத்துவர் எழிலன் நாகநாதன்**
(மருத்துவ அணிச் செயலாளர்)

**திரு. கார்த்திகேய சிவசேனாபதி**
(சுற்றுச்சூழல் அணிச் செயலாளர்)

**திருமதி. ஆ. தமிழரசி ரவிக்குமார்**
(மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர்)

**திரு. ஜி.சந்தானம்,**
இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (ஓய்வு)

**திரு. சுரேஷ் சம்பந்தம்**
ஒருங்கிணைப்பாளர்,
கனவு தமிழ்நாடு [Convenor, Dream Tamilnadu]

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள்- 17.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# கரூர் மாவட்டத்தில் தொடர் விளையாட்டுப் போட்டிகள்!

### வெற்றி பெற்றவர்களுக்கு செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

கரூர், டிச.18-

இளைஞர் எழுச்சி நாள் விழாவை கொண்டாடும் வகையில் கரூர் மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்று வரும் தொடர் விளையாட்டு திருவிழாவில், பெண்களுக்கான கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு

மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார்.


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூரில் விளையாட்டு திருவிழா நடைபெற்று வருகிறது. அந்த வகையில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 2,15,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான பெண்களுக்கான கபடி போட்டி கரூர், திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்றது..

முதல் பரிசாக ரூ.75000 மற்றும் கோப்பையை கரூர் சேரன் உடற்கல்வியில் கல்லூரி அணியும், இரண்டாம் பரிசாக ரூ.50000 மற்றும் கோப்பையை புலியூர் என்ஏ. அகாடமி அணியும், மூன்றாவது பரிசாக ரூ.25000 மற்றும் கோப்பையை பாலசமுத்திரப் பட்டி பி. அணியும், நான்காவது பரிசாக ரூ.25000 மற்றும் கோப்பையை கரூர் சூர்யா நினைவு கபாடி குழுவும் வென்றனர். கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பரிசு தொகை மற்றும் பரிசு கோப்பைகளை வழங்கினார்.

பாலசமுத்திரப்பட்டி ஏஅணி, கரூர் கொங்கு கலை அறிவியல் கல்லூரி அணி, குளித்தலை ப்ளாக் ஸ்குவாட் அணி மற்றும் கர்ணம்பட்டி பி.வி.ஓ.சி. அணிகள் காலிறுதி போட்டிகளில் வெற்றி பெறாவிட்டாலும் மிக சிறப்பாக விளையாடினர்.. சிறந்த ரைடராக தேர்வான என். கிருத்திகா, சிறந்த டிபென்டர் தேர்வான ராகவி ஆகியோருக்கு பரிசு வழங்கி செந்தில் பாலாஜி வாழ்த்து தெரிவித்தார்.

---

**தடைகளைத் தாண்டி தமிழ்நாடு முதலிடம்!**




---

## திருப்பத்தூரில்

# பெரிய மருது பாண்டியர் 277வது பிறந்த நாள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு!

சிவகங்கை, டிச. 18-

சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். பெரிய மருது சின்ன மருது என்று அழைக்கப்பட்ட இவர்கள் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடிய பொழுது ஆங்கிலேயர்களால் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார்கள். அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுத் தூண் அமைந்துள்ளது. நேற்று முன்தினம் பெரிய மருதுவின் 277 வந்து பிறந்த நாளை முன்னிட்டு திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் உள்ள அவரது நினைவுத் தூணில் கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மருது பாண்டியர் இளைஞர் நல அறக்கட்டளை நிறுவனர் மாவட்டகழக தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டியன் ஏற்பாட்டின் பேரில் 500 பேருக்கு அன்ன தானத்தையும் அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் ஆர் .கார்த்திகேயன், தலைவர் ராம .ரவி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப்ணி அமைப்பாளர் பணியாளர் சசி வர்ணம் ,துணைஅமைப்பாளர்கள் காளிமுத்து சோமு, மருதுபாண்டியர் இளைஞர் அறக்கட்டளை நிர்வாகிகள் விஜயசேகர், கணேசன், தலைவர் வெல்டிங் குமார், செயலாளர் சுரேஷ், முத்து கிருஷ்ணன் துணைச் செயலாளர் சத்யா, வி.சுரேஷ், பொருளாளர் சுப்பிரமணியன் சேது உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டினை மருதுபாண்டியர் இளைஞர் நல அறக்கட்டளை நிறுவனர் பூக்கடை பாண்டி தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.